சுருக்கம்

பணியமைப்பு – தூத்துக்குடி கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டத்தின் கீழ் உள்ள தூத்துக்குடி பெருந்திட்ட வளாக உபகோட்டத்தின் பெயரை கட்டிட கட்டுமான உபகோட்டம் எனவும், பெருந்திட்ட வளாக கட்டிட பிரிவு அலுவலகங்களை கட்டிட கட்டுமான பிரிவு அலுவலகங்கள் எனவும் பெயர் மாற்றம் செய்து அரசு ஆளைண வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணித் (ஜி1) துறை

அரசாணை (நிலை) எண்.37

நாள் :17.2.2009
மாசி – 5
திருவள்ளுவர் ஆண்டு 2039

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.42, பொதுப்பணித்துறை, நாள் 19.2.2008.
2. தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை சென்னை-5 கடித எண்.உசெபொ/டி10(அ)/5481/09, நாள் 29.1.2009.

---

ஆணை :

பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை தூத்துக்குடி கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்ட அலுவலகத்தின் ஆளுகையில் கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டம் தூத்துக்குடி மற்றும் கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டம், விருதுநகர் ஆகிய இரண்டு கோட்டங்கள் இயங்கி வருகின்றன என்றும், இதில் கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டம், தூத்துக்குடியின் கீழ் பெருந்திட்ட வளாக கட்டிட உபகோட்டம் தூத்துக்குடியை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது என்றும், இவ்வுபகோட்டத்தின் கீழ் பெருந்திட்ட வளாகக் கட்டிட பிரிவு – 1, பிரிவு – 2, பிரிவு – 3, பிரிவு – 4 ஆகிய பிரிவுகள் தூத்துக்குடியை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டுவருகின்றன என்றும், இவ்வுபகோட்டத்தின் மூலம் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டுமானப் பணிகள் செய்து முடிக்கப்பட்டு விட்டது என்றும், பின்பு தூத்துக்குடி அரசு பொதுமருத்துவக் கல்லூரி கட்டிடம் கட்டுமானப் பணிகளும் செய்து முடிக்கப்பட்டு விட்டது என்றும், எனவே நிர்வாக வசதியின் அடிப்படையிலும், தற்போதைய நிலையில் பெருந்திட்ட வளாகம் என்ற பெயர் பொருந்தாத நிலையிலும், அவ்வுப கோட்டம் பொதுப்பணித்துறை வளாகத்தில் இயங்கி வருவதாலும், பெருந்திட்ட வளாக கட்டிட உபகோட்டம் என்பதற்கு பதிலாக கட்டிட கட்டுமான உபகோட்டம் எனவும், பெருந்திட்ட வளாக கட்டிட பிரிவு அலுவலகம் என்பதற்கு பதிலாக கட்டிட கட்டுமான பிரிவு அலுவலகம் எனவும் பெயர் மாற்றம் செய்வது மிகவும் ஏற்புடையது எனவும் தெரிவித்துள்ளார்.

(த.பி.பா.)

2. மேற்கண்ட நிலையில், தூத்துக்குடி கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டத்தின் கீழ் செயல்படும் பெருந்திட்ட வளாக கட்டிட உபகோட்டம், தூத்துக்குடி என்பதற்கு பதிலாக, கட்டிட கட்டுமான உபகோட்டம் தூத்துக்குடி எனவும், பெருந்திட்ட வளாக கட்டிட பிரிவு அலுவலகம் என்பதற்கு பதிலாக, கட்டிட கட்டுமான பிரிவு அலுவலகம் எனவும் பெயர் மாற்றம் செய்யுமாறு தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேலே பத்தி 2ல் காணும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை அவர்களின் கருத்துருவினை ஏற்று தூத்துக்குடி கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டத்தின் கீழ் செயல்படும் பெருந்திட்ட வளாக கட்டிட உபகோட்டம், தூத்துக்குடி என்பதற்கு பதிலாக கட்டிட கட்டுமான உபகோட்டம், தூத்துக்குடி எனவும், பெருந்திட்ட வளாக கட்டிட பிரிவு அலுவலகம் என்பதற்கு பதிலாக, கட்டிட கட்டுமான பிரிவு அலுவலகம் எனவும் பெயர் மாற்றம் செய்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ். ஆதிசேஷையா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, சென்னை-5.
கண்காணிப்புப் பொறியாளர், கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்,
பொதுப்பணித்துறை, தூத்துக்குடி.
செயற்பொறியாளர்,கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டம்,
பொதுப்பணித்துறை, தூத்துக்குடி.
மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.
கருவூல அலுவலர், தூத்துக்குடி.

நகல்:
நிதித்துறை, சென்னை–5.
பொதுப்பணித்துறை A, B, C, D, E, F பிரிவுகள்
உதிரி / இருப்பு கோப்பு.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்